





கிறிஸ்துமஸ் பெருவிழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 2500 கிறிஸ்துவ குடும்பங்களுக்கு பரிசு பொருட்கள் மற்றும் உதவித் தொகையை வழங்கும் விழா நேற்று மாலை நடைபெற்றது இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், பகுதி செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, கவுன்சிலர் பரிமளம் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

# “மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட விரும்புபவர்கள்தான் மக்களிடம் பொய்களைச் சொல்லி வெறுப்பை பரப்புவார்கள்!”

## சென்னையில் நடைபெற்ற ‘அன்பின் கிறிஸ்துமஸ்–2024’ விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

சென்னை, டிச. 22 -

**சென்னை, கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் ‘அன்பின் கிறிஸ்துமஸ்-2024’ விழா துறைமுகம் தொகுதியில் உள்ள பிராட்வே டான் பாஸ்கோ பள்ளியில் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, பாதிரியார்கள் - கன்னியாஸ்திரிகள் - பொதுமக்கள் உட்பட 2,500 பேருக்கு கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகளை வழங்கி, வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர், ‘அனைத்து மதங்களும் போதிப்பது அன்பை மட்டுமே’ என்பதை எடுத்துரைத்து, ‘மதத்தின் பெயரால் பரப்பப்படும் வெறுப்பினை வீழ்த்துவோம்’ என்றும் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் பெருவிழாவில், 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன்.

### நான்காவது முறை

தொடர்ந்து 4-வது ஆண்டாக, 4-வது முறையாக சென்னை கிழக்கு மாவட்டம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து வந்து, இந்த நலத்திட்டங்களைக் கொடுக்க வைத்துள்ள அருமை அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு என் அன்பையும், நன்றியையும், பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் சேகர்பாபு அவர்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு அமைச்சர் என்றாலும், ஒரு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியோ, ரம்ஜான் நிகழ்ச்சியோ என்றாலும் அவரைவிட யாராலும் சிறப்பாக நடத்த முடியாது.

கிறிஸ்துமஸ் என்றாலே அன்பைக் கொண்டாடுகின்ற ஒரு பண்டிகை. அதனால்தான் இன்றைக்கு 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்து, உங்கள் அத்தனைப்பேரின் முகத்திலும் சிரிப்போடு அதைக் கொடுக்க வைத்துள்ளார்.

### கிறிஸ்துமஸ் விழா

உங்கள் அனைவருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சார்பாக, என்னுடைய கிறிஸ்துமஸ் தின வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டுமொத்த உலகையே மகிழ்ச்சியில் ஆழ்த்தக்கூடிய விழா, எதுவென்றால், அது நம் கிறிஸ்துமஸ் விழா மட்டும்தான். கிறிஸ்துமஸ் தனிப்பட்ட முறையில் எனக்குத் தனி மகிழ்ச்சி வந்துவிடும். ஏற்கனவே நான் சொன்னதுதான். நான் படித்தது எழும்பூரில் இருக்கின்ற டான் பாஸ்கோ பள்ளியில்தான். அதன்பிறகு மேல்படிப்பு படித்தது லயோலா கல்லூரியில்தான்.

### அனைவருக்கும் பொதுவானவன் நான்

எவ்வளவோ நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும், இந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், அண்ணன் சேகர்பாபு நடத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது எனக்கு இன்னும் கூடுதல் பெருமை. மறக்க முடியாத நிகழ்வாக இருக்கும். கடந்த 2022-ஆம் ஆண்டு இதே திடலில் நான் பேசியது, பெரிய பேசுபொருளாகிவிட்டது. அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் பேசும்போதுகூட குறிப்பிட்டார்.




நானும் ஒரு கிறிஸ்துவன் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். உடனே சங்கிகளுக்கு பயங்கர வயிற்றெரிச்சல். அது எப்படி கிறிஸ்துவன் என்று சொல்லலாம்.

நீங்கள் என்னை கிறிஸ்துவன் என்று நினைத்தால், நான் கிறிஸ்துவன், நீங்கள் என்னை முஸ்லீம் என்று நினைத்தால், நான் முஸ்லீம். நீங்கள் என்னை இந்து என்று நினைத்தால், நான் இந்துதான். இப்படி அனைத்து மக்களுக்கும் அனைவருக்கும் பொதுவானவன் நான் என்று அந்த மேடையிலேயே சொன்னேன்.

### அன்புதான் எல்லாம்

எல்லா மதங்களும் அடிப்படையில் அன்பை மட்டும்தான் போதிக்கச் சொல்கிறது. ஆனால், அதே மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட விரும்புபவர்கள்தான் மக்கள் மத்தியில் பொய்களைச் சொல்லி வெறுப்பை பரப்புவார்கள். வெறுப்பைப் பரப்பக்கூடியவர்கள் உண்மையைப் பேச மாட்டார்கள். உண்மையைப் பேசி, வெறுப்பைப் பரப்ப முடியாது.

மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடுபவர்கள் மட்டும்தான் வெறுப்புகளை பரப்புவார்கள் என்று நாம் இதுவரை நினைத்துக்கொண்டு இருந்தோம். ஆனால், இப்போது பார்த்தால், ஒரு நீதிபதி கூட மத வெறுப்பு கருத்துகளைப் பொது வெளியில் பேசியுள்ளார். அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புக் கருத்துகளை பேசியுள்ளார். அந்த நீதிபதியைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை, மாநிலங்களவையில் நம் எம்.பி-க்கள், காங்கிரஸ் எம்பிக்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார்கள். அதில்கூட அ.தி.மு.க. என்ற கட்சி உடன்படவில்லை. அந்த அளவிற்கு பா.ஜ.வி-ன் மீது அ.தி.மு.க-வுக்கு பயம் இருக்கிறது.

அரசியலமைப்புக்கு எதிரான கருத்துகளைப் பேசி இருக்கின்ற ஒரு நீதிபதியைப் பதவியை விட்டு நீக்கும் தீர்மானத்தை கூட ஆதரிக்க தெம்பு இல்லாத, துணிச்சல் இல்லாத அ.தி.மு.க-வுக்கு, இந்த நேரத்தில் மக்கள் நீங்கள் பாடம் புகட்ட வேண்டும். அதுமட்டுமல்ல, மாநிலங்களின் உரிமைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று பா.ஜ.க கொண்டு வருகின்ற ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற திட்டத்திற்கும் அ.தி.மு.க. ஆதரவு கொடுத்திருக்கிறது.

### பேச்சு, மூச்சு கூட கிடையாது

கடந்து மூன்று நாட்களாக தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்துக்கொண்டு இருப்பீர்கள். உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், சட்டமேதை அம்பேத்கர் அவர்களை அவமதித்து நாடாளுமன்றத்தில் பேசிவிட்டார். இதைக்கேட்டு ஒட்டுமொத்த இந்தியாவே கொந்தளித்துக்கொண்டு இருக்கிறது. அனைத்து மக்களுமே இதற்கு எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். நாட்டின் எல்லா மாநிலங்களிலும் அமித் ஷாவுக்கு எதிராக போராட்டங்கள் நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால், அ.தி.மு.க-வை பார்த்தீர்கள் என்றால் அதைப்பற்றி ஒரு பேச்சு, மூச்சு கூட கிடையாது.

அம்பேத்கரைப் பற்றி அமித் ஷா பேசியதில் அ.தி.மு.க-வின் நிலைப்பாடு என்ன என்று எடப்பாடி பழனிசாமியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டால், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொன்ன பதில்தான் எனது நிலைப்பாடு என்று சொல்கிறார். இப்படிப்பட்ட ஒரு எதிர்க்கட்சித் தலைவரை எங்கேயாவது பார்த்து இருக்கிறீர்களா? உலக அரசியல் வரலாற்றிலேயே, இதுபோன்ற ஒரு விளக்கத்தை யாரும் கொடுத்திருக்க மாட்டார்கள்.

அப்படி ஜெயக்குமார் என்னதான் பேசியிருக்கிறார் என்று பார்த்தால், அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசியது பா.ஜ.க-வுக்கு பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்லியிருக்கிறார். பா.ஜ.க-வுக்கு பின்விளைவு ஏற்படும் என்பது ,தமிழ்நாட்டு மக்களுக்கு எப்போதுமே தெரியும், அதை அவர் சொல்லி தெரிய வேண்டும் என்ற தேவை இல்லை.

### அ.தி.மு.க - கள்ளக்கூட்டணி

நம் திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அமித் ஷாவை வன்மையாகக் கண்டித்து மாநிலம் முழுவதும் ஒரே நாளில் போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். ஆகவே இனிமேல் பா.ஜ.க-வோடு அ.தி.மு.க கள்ளக்கூட்டணி என்று சொல்லத் தேவையில்லை. அது நல்ல கூட்டணியாகவே மக்கள் எடுத்துக்கொண்டார்கள். எல்லோரின் கண்ணுக்கும் தெரிகின்ற கூட்டணியாகவே அந்த கூட்டணி அமைந்து இருக்கிறது.

அதற்கு மேலும் ஒரு உதாரணம். சமீபத்தில், அ.தி.மு.க-வின் பொதுக்குழு நடந்தது. அதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றி உள்ளனர். ஒரு தீர்மானம்கூட ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்தோ, விமர்சித்தோ நிறைவேற்றவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இரண்டு சின்ன நிகழ்வுகளைச் சொல்லி இருக்கிறார். அதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### முத்தமிழறிஞரின் கதை

கலைஞர் அவர்கள் இரண்டு விதமான நிழல்கள் பற்றி சொல்லி இருக்கிறார். ஒரு ஊரில் மிகவும் கடுமையான வறட்சி. வறட்சியால் ஏற்பட்ட சூட்டால் நிலங்கள் எல்லாம் வெடித்துப்போய் இருக்கின்றன. அந்த நிலத்தில் பாம்பு ஒன்று ஊர்ந்து வருகிறது. வெயில் கடுமையாக இருப்பதால், தரைச் சூட்டைத் தாங்க முடியாமல் பாம்பு தன் தலையையும், உடம்பையும் தூக்கிக் கொண்டு வெறும் வாலை மட்டும் வைத்துக்கொண்டு மெதுவாக நகர்ந்து வந்துகொண்டே இருக்கிறது.

அப்போது அந்த பாம்பின் தலை மற்றும் உடம்பின் நிழல் தரையில் படுகிறது. அந்த நிழலைப்பார்த்த ஒரு தவளை அந்த நிழலில் ஒதுங்கி நிற்கிறது. பாம்பு கீழே குனிந்து தவளையைப் பார்த்தால் ,தவளை நிலைமை என்னவென்று உங்களுக்கு தெரியும். தவளையின் கதை அவ்வளவுதான்.

அடுத்து இன்னொரு கதை கலைஞர் சொல்கிறார். ஒரு தாய் மானும், குட்டி மானும் பாலைவனத்தில் நடந்து சென்று கொண்டிருக்கின்றன. உச்சிவெயில் தாங்க முடியவில்லை. குட்டி மானால் நடக்க முடியவில்லை. அப்போது அந்த தாய் மான் நின்றுகொண்டு அதனின் நிழல் ஒரு பக்கம் விழும்போது, தாய் மான் தன் குட்டி மானை ‘என் நிழலில் உட்கார்ந்துகொள் ஓய்வு எடுத்துக்கொள்’ என்று சொல்கிறது அந்த தாய் மான். கொளுத்தும் வெயிலைத் தான் வாங்கி கொண்டு, குட்டி மானுக்கு நிழல் கொடுத்ததுதான் அந்த தாய் மான்.

### பாதுகாப்பாக இருப்போம்

இப்போது இரண்டு நிழல்களைப்பற்றி உங்களிடம் சொல்லி இருக்கிறேன். இந்த இரண்டு நிழலுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை நீங்கள் உணர்வீர்கள். இதில் முதலில் சொன்ன பாம்பு நிழலில் நிற்கும் தவளைப்போலத்தான் மக்கள் அ.தி.மு.க-வைப் பார்க்கிறார்கள். அந்த பாம்பு கொஞ்சம் கீழே குனிந்து பார்த்துவிட்டால் தவளையின் கதை முடிந்துவிட்டது. ஆனால், தாய் மான் நிழலில் குட்டிமான் இளைப்பாறுவதைப் போலத்தான் தி.மு.க-வை சிறுபான்மை மக்கள் பார்க்கிறீர்கள். இது அன்பால் செய்கின்ற உதவி. இதற்கு ஈடு, இணை எதுவுமே கிடையாது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் இருக்கின்ற வரை சிறுபான்மை மக்களுக்காக என்றைக்கும் உங்களுக்குப் பாதுகாப்பாக இருப்போம்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் தி.மு.க வெற்றி பெறும் என்று நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார், உறுதி எடுத்து இருக்கிறார் என்றால், அதற்கு சிறுபான்மை மக்கள் உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையும் மிக முக்கியக் காரணம். அந்த நம்பிக்கையை நிச்சயம் நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.

உங்களுக்கு அரணாக நிற்கும் கழகத்திற்கு நீங்கள் எப்போதும் அரணாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிற்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்தில் சட்டமன்ற தேர்தல் வர இருக்கிறது. எப்போதும்போல இப்போதும் கழகத்திற்கு நீங்கள் பேராதரவை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது கிறிஸ்துமஸ் தின வாழ்த்தைக் கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்பாளர்கள்

விழாவில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர், கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், சிறுபான்மையினர் நல ஆணைய முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர், கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், உணவுப்பொருள் மற்றும் சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவர் ரங்கநாதன், டான் பாஸ்கோ பள்ளி தாளாளர் கிரகதி தேவராஜன், இ.சி.ஐ பேராயர் டேவிட் இன்னாசி, ஆற்காடு லூதரன் திருச்சபை பேராயர் பீட்டர் பால் தாமஸ், சி.எஸ்.ஐ. சென்னை மாமன்ற கௌரவச் செயலாளர் அகஸ்டின் பிரேம்ராஜ், சகாயமாதா ஆலய பேராயர் சிற்றரசு, தொகுப்பாளர் கவிஞர் அருள் பிரகாஷ்,

சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் நரேந்திரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், மாவட்ட அறங்காவல் குழுத் தலைவர் ரவிச்சந்திரன், ஏகப்பன், ஜி.எம்.தேவன், தேவ ஜவகர், நிசர் ஆசாத், புனிதவதி எத்திராசன், ஷேக் அப்துல்லா, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப்.முரளி, நாகராஜன், வாசு, கு.பி.ஜெயின், சாமிகண்ணு, தமிழ் வேந்தன், சுதாகர், வேலு, டி.எஸ்.பி.ராஜகோபால், நாகராஜன், ராஜசேகர், முரளி, மண்டலக்குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு,

மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பரிமளம், தாக நபின், ராஜேஷ் ஜெயின், விஜயகுமார், கலைச்செல்வி, ராஜா, பரத்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், ஜெகதீஷ், தனசேகர், வினோத், பிரபு, சங்கர் நானா உள்பட ஏராளமான கழக முன்னணியினர் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.




நேற்று (21.12.2024) சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், செட்டிநாடு வித்தியாஸ்ரமம், குமாரராஜா முத்தையா அரங்கத்தில் நடைபெற்ற பொதுப் பணித் துறை பொறியாளர்கள் சங்கக்கூட்டத்தில் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு செய்திமடல், 2025 ஆண்டு நாட்குறிப்பு மற்றும் நாட்காட்டி ஆகியவற்றை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (21.12.2024) சென்னை, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், சாலையோர உணவு வணிகர்களுக்கான பதிவு சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் திரு.லால்வேனா, இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் மரு. தேவபார்த்தசாரதி, ஒன்றிய அரசு இணை இயக்குநர் (பயிற்சி) திரு.அன்கேஷ்வர் மிஸ்ரா, தென்மண்டல இயக்குநர் திரு.வி.கே.பஞ்சம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் .ந.இராமலிங்கம், நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், சென்னை மாவட்ட நியமன அலுவலர் மரு. சதிஷ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.